2nd December 1970]

*திரு. மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : சம்பிரதாயம் என்று இங்கே குறிப்பிட்டார்கள். எந்தச் சம்பிராதாயத்தை அவர்கள் குறிப்பிடுகிருர்கள் என்று தான் எனக்குப் புரியவில்லை. இப்போது எப்படி நிலைமை இருக்கிறது என்ருல் இந்த வசதி சட்டத்தில் இல்லை, விதி (ரூல்)யில் அவ்வாறு இல்லை. ஆனுல், பைலாவில் சொல்லப்பட்டிருக்கிறது. அதை இன்றையதினம் உயர்த்தி ரூலிலேயே கொண்டு வந்திருக்கிறேம். பைலா என்பது மூன்ரும் தரச் சட்டம். சட்டம், விதி, அதற்குக் கீழே இருப்பது பைலா. எனவே பைலாவில் இருப்பதை உயர்த்தி விதியில் சேர்த்திருக்கிறேம் என்று சொல்லிக் கொள்ளுகிறேன். 6-50 p.m.

திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு : சட்டத்திலே வைக்க வேண்டும் என்றுதான் நாங்கள் சொல்லுகிறேம். இதில் என்ன வித்தியாசம் ?

DEPUTY CHAIRMAN : The question is—

"That this House recommends that in clause 2 of the Bill in the proposed new Section 73-F, in sub-section (2) clause (*iv*) be *deleted*."

The recommendation was put and lost.

As there are no recommendations, the Bill will be returned to the Assembly without any recommendations.

DEPUTY CHAIRMAN : Now we shall take up the other Bills. By sitting for a few minutes more, we shall dispose of them.

(4) *The Tamil Nadu Co-operative Societies* (*Second Amendment*) *Bill*, 1970 (*L.A. Bill*, *No*. 38 *of* 1970)

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : தலைவர் அவர்களே, தமிழ் நாடு 1970'ஆம் ஆண்டு கூட்டுறவு சங்கங்களின் 2 வது திருத்த மசோதாவை (தமிழ் நாடு மசோதா எண். 38/1970) தமிழகச் சட்ட மன்றத்தில் நிறைவேற்றியவாறு இவ்வவை ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கோருகிறேன். இந்த மசோதா மூலம் இறவை நீர்ப்பாசன கூட்டுறவுச் சங்கங்களை ஏற்படுத்துவதற்கான வழிவகைகளைச் செய்கிறேம். இதற்கு முன்னுல் நடந்த விவாதத்தினை யொட்டி இதிலே அதிக விவாதம் தேவையில்லை என்று தான் கருது கிறேன். ஏனென்ருல் இதில் கருத்தொற்றுமை இருக்கிறது. இதற்கான காரணங்கள் எல்லாம் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு அச்சிட்டு வழங்கப் பட்டிருக்கின்றன. அதிலிருந்து அவைகளை நன்ருக அவர்கள் அறிந்திருப் பார்கள் என்றே நம்புகிறேன். கடந்த 30 ஆண்டுக் காலமாக நில வள வங்கிகள் இருந்து வருகின்றன. ஆனுல் சின்னஞ்சிறு விவசாயிகளுக்கு அந்த நில வள வங்கிகள் மூலம் ஒரு பலனும் ஏற்படவில்லை. ¼ ஏக்கர், ½ ஏக்கர், ¾ ஏக்கர், 1 ஏக்கர் என்று நிலம் உள்ளவர்களுக்கெல் லாம் எந்த விதமான நன்மையும் அந்த நில வள வங்கிகள் மூலம் ஏற்படவில்லை. குறிப்பாக என்னுடைய நண்பர் காஞ்சிபுரம் நில வள

*Printed as Appendix V

வங்கியின் தலைவர் அவர்களை நான் சந்தித்துக் கேட்டபோது, அவர் சொன்னார், ''நாங்கள் இதுவரை 1 கோடி ரூபாய் வரை விவசாயிகளுக்குக் கடன் கொடுத்திருக்கிறோம்'' என்று. ஆனால் சின்னஞ்சிறு விவசாயிகள் யாருக்கேனும் இதுவரை இந்த வங்கிகள் மூலமாகக் கடன் கொடுத்திருக்கிறீர்களா என்று கேட்டபோது, இல்லை என்றுதான் பதில் சொன்னார். 1 ஏக்கர், 2 ஏக்கர், 3 ஏக்கர் வரை உள்ளவர்களுக்குக் கூட நிதி உதவி செய்யவில்லை என்றுதான் அவர் தெளிவாகச் சொன்னார். ஆனால் மொத்தத்தில் இதுவரை 1 கோடி ரூபாய் அவர் வங்கியின் மூலம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அப்படி இருந்தாலும், இந்தச் சின்னஞ்சிறிய விவசாயிகளுக்கு ஒரு வித உதவியும் செய்யப்படவில்லை. அவர் மேல் குறையில்லை. சட்டம் அப்படி இருக்கிறது. எனவே இதுவரை அந்த நிலைமையை உருவாக்க முடியவில்லை. ஆகையால் இப்போது குறைந்த அளவு நிலம் உள்ளவர்களுக்கு இந்த வசதியை செய்து தர முன் வந்திருக்கிறோம். குறைந்த அளவு நிலம் உள்ள சின்னஞ் சிறு விவசாயிகளை ஒன்றுபடுத்தி ஒரு கூட்டுறவு மூலம் குழாய்க் கிணறு அமைத்து அதன் மூலம் நீர்ப்பாசன வசதி செய்யும் வகையில் இந்த மசோதாவை இங்கே கொண்டுவந்திருக்கிறோம். எனவே இந்த மசோதாவை ஒரு மனதாக நிறைவேற்றிக் கொடுக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்.

DEPUTY CHAIRMAN : Motion moved—

"That the Tamil Nadu Co-operative Societies (Second Amendment) Bill, 1970 (L.A. Bill No. 38 of 1970), as passed by the Assembly, be taken into consideration."

திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு : தலைவர் அவர்களே, சில நிமிடங்களுக்கு முன் நிறைவேற்றப்பட்ட சட்டத்தைக் கொண்டுவர எது மூல காரணமாக இருந்ததோ அதேதான் இது. பாசன வசதிக் கூட்டுறவுச் சங்கத்தை அமைப்பதற்கும் அந்தச் சிறிய விவசாயிகள் கடன் பெறுவதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கும் பழைய சட்டத்திலேயே இடம் இருக்கிறது. ஒரு ஏக்கருக்கு அதிகமாக உள்ளவர்களுக்குக் கடன் கொடுக்கலாம் என்று ஏற்கெனவே விதிகளில் இருக்கிறது. நடைமுறையில் நடந்து கொண்டிருக்கிறது. அவர்களுக்குக் கொடுக்கவில்லை என்று அமைச்சர் அவர்கள் கருதுகிறார்கள். அவர்கள் ஏற்கெனவே 66 ஆண்டுக் காலமாக நம் நாட்டில் இருந்து வருவது என்ன, நடைபெறுவது என்ன என்பதையெல்லாம் சிந்திக்காமல் அப்போது நடைபெறவில்லை என்று கருதுகிறார்கள். அவர்கள்கூட்டுறவுக்குப் புதிது. அதனால்தான் முற்காலத்தில் என்ன நடைபெற்றுக்கொண்டிருந்தது என்பதைப் புறக்கணித்துப் பேசுகிறார்கள். இந்தச் சங்கம் உருவாவதற்குப் பல ஆண்டுகளாக முயற்சி மேற்கொள்ளப்பட்டு வந்திருக்கிறது. சிறிய விவசாயிகள் சேர்ந்து கிணறு வெட்டுவதற்காக சங்கம் அமைத்துக்கொண்டு பாசன வசதி செய்துகொள்ளலாம் என்று விவசாயிகளுக்கு எடுத்துச் சொல்லப்பட்டது. எந்தக் கிராமத்திற்கும் போய் சிறிய விவாசயிகள் சேர்ந்து கிணறை வெட்டி பாசன வசதி அமைத்துக்

கொள்ளுங்கள் என்றால், யாருமே அதற்கு முன் வருவதில்லை. அந்த அமைப்பில் யாருக்கு அதிகாரம் என்று தெரியவில்லை. பாசனத்தில் முன் பாசனம், பின் பாசனம் தகராறுகள் வருகின்றன. ஆகையால் அகரத்தில் ஆரம்பிக்கப்பட்டிருக்கிற இந்தச் சங்கத்தை வைத்துக் கொண்டு மாநிலம் முழுவதும் இதைச் செய்துவிடலாம் என்று அமைச்சர் அவர்கள் மனப்பால் குடிக்கிறார்கள் என்று கருதுகிறேன். நாங்கள் அதைப்பற்றி அனுபவத்தில் தெரிந்துகொண்டவர்கள். பல ஆண்டுகளாக இப்படிப்பட்ட சங்கத்தை அமைக்க விவசாயிகளின் மறுத்து வந்திருக்கிறார்கள். இதற்கு முன்னால் சட்டத்தில் வாய்ப்பில்லை என்று அமைச்சர் கருதுகிறார். அது தவறு. சட்டத்தில் வாய்ப்புகள் இருக்கின்றன. இதுவரையுள்ள சட்டத்தில் இந்தச் சங்கத்தை அமைக்க எது தடையாக இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் எடுத்துக் காட்டட்டும். இந்த வகையில் இச்சட்டத்தைக் கொண்டு வந்து, அகரத்தில் ஆரம்பித்திருப்பதாகவும் அதற்கு விளம்பரத்திற்கு ரூ. 20 ஆயிரம், ரூ. 30 ஆயிரம் செலவழித்ததாகவும் சொல்கிறார்கள். செங்கற்பட்டு ஜில்லாவிற்கு மட்டுமல்ல. எல்லா இடங்களிலும் நிகழ்ச்சிகள் வைக்கலாம். கூட்டுறவுச் சங்கங்களுக்கு அரசாங்கம் பங்குத்தொகையாகக் கொடுக்கிறது என்று சொல்லி, அந்தக் காலத்திலிருந்து கொடுத்து வந்ததை எல்லாம் சேர்த்துக் கணக்குக்காட்டி பிரிண்ட் செய்யச் சொல்லி அதற்காக இரவும் பகலுமாக ஒரு டெபுடி ரிஜிஸ்ட்ரார் அச்சகத்திலேயே இருந்து, புத்தகமாக அச்சடித்து, அந்த விழா வைக்கொண்டாடியிருக்கிறார்கள். இந்த விழாவும் இனி அப்படி நடக்கப்போகிறது. நடைமுறையில் என்ன தடையிருக்கிறது என்று புரியவில்லை. ஆகையால் இது அனாவசியமான சட்டம் என்று கூறிக்கொள்கிறேன்.

*திரு. கே. ராஜாராம்: தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்தின்படி நிர்மாணிக்கக் கூடிய சொசைடிகளுக்கு ''ஸ்மால் ஃபார்மர்ஸ் இர்ரிகேஷன் சொசைடி'' என்று பெயர் இருக்கும். நோக்கம் வெகு நல்ல நோக்கம். கடந்த பத்து ஆண்டுகளாக நான் வற்புறுத்தி வருகிறேன், இம்மாதிரி ஒரு ஏற்பாடு இருக்க வேண்டுமென்று. நான் சொன்னதெல்லாம் சர்க்காருடைய செலவிலேயே பொதுவாகக் கிணறுகள் வெட்டி ஆங்காங்கே சுற்றியுள்ள 50, 60 ஏக்கருக்கு நீர்ப்பாசன வசதி செய்து கொடுக்க வேண்டுமென்பது. ஆனால் அமைச்சர் அவர்கள் இதற்காகத் தனி ஸ்தாபனமாக கூட்டுறவு சொசைடிகளை ஏற்படுத்தி அதில் இரண்டு ஏக்கர் நிலம் உள்ளவர்களை அங்கத்தினர்களாகச் சேர்த்துசெயல்படலாம் என்று கூறுகிறார். இதில் இரண்டு ஹெக்டேர் நிலம் உள்ளவர்கள் சிறிய விவசாயிகள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. கிட்டத்தட்ட 5 ஏக்கர் ஆகிறது அந்தக் கணக்கில். ஐந்து ஏக்கருக்குக் குறைவாக நிலம் உள்ளவர்கள்தான் அதில் அங்கத்தினர்களாக இருக்கலாம்என்றால், தயவு செய்து இதில் விழிப்புடன் இருக்க வேண்டும். ஐந்து ஏக்கருக்குக் குறைவாக உள்ள லட்சாதிபதிகள் இருக்கலாம். அவர்களுக்கும் இது பொருந்தும்.

திரு. கே. எஸ். மணி: எப்படியிருந்தாலும், அந்த ஐந்து ஏக்கருக்குத்தானே இது பொருந்தும்.

திரு. கே. ராஜாராம் : தாராளமாக அவர்கள் சொந்தப் பணத்தைப் போடலாம். அதிக வட்டிக்கு வாங்கிய பணத்தைக் குறைந்த வட்டிக்கு அரசு கொடுக்கிறது. மத்திய சர்க்காரிடம் அதிக வட்டிக்கு வாங்கி விவசாயிகளுக்குக் குறைந்த வட்டிக்குக் கொடுக்கிறோம். அந்தச் சலுகை
7-00 p.m. களை அவர்கள் பெற வேண்டிய அவசியமில்லை என்பதைத்தான் நான் சொல்கிறேன். அதற்கு விதி விலக்கு ஏதாவது கொடுத்து இன்கம் டாக்ஸ் செலுத்துகிறவர்களுக்கு இந்த வசதி இருக்கக் கூடாது என்று வழி செய்ய வேண்டும். அவசியமானால், ஒரு திருத்தம் கொண்டுவர வேண்டும். நான் திருமங்கலம் தொகுதி எம்.எல்.ஏ. ஆக இருக்கும் போது, கூட்டுறவு விவசாயப் பண்ணை வைக்க வேண்டுமென்று கருதி, முதல் பண்ணையாக அந்தத் தாலுக்காவில் வாலாங்கூரில் வைக்கப் பட்டது. அது சரியாக நடைபெறவில்லை. அது அந்த இயக்கத்திற்கே பெரிய தோல்வி. அது ஏன் தோற்றது என்று சற்று ஆராய்ச்சி செய்ய வேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன். இதில் அங்கத்தினர்களாகச் சேருபவர்கள் அந்த நிலத்தையும் திரும்பப்பெற்றுக் கொள்ள முடியாது. அங்கத்தினரும் பதவியிலிருந்து விலகிக்கொள்ள முடியாது. சட்டத்திலேயே அப்படிப்பட்ட நிலைமையை உருவாக்கி வைத்திருக்கிறோம். இது ஒன்று. இரண்டாவதாக, குறிப்பிட்ட ஒரு பயிரைத்தான் அந்த விவசாயி பயிரிட வேண்டும். அதாவது எந்தப் பயிரைப் பயிரிட வேண்டுமென்று சங்கத்தில் முடிவு செய்கிறார்களோ, அந்தப் பயிரைத்தான் விவசாயி பயிரிட வேண்டும். அதிலும் ஒரு குறிப்பிட்ட முறையில் ஜப்பானிய முறையில் பயிரிட வேண்டும் என்று சொன்னால், ஜப்பானிய முறையில்தான் பயிரிட வேண்டும். இப்படிக் கரும்பு பயிரிட வேண்டும் என்றால், கரும்புதான் பயிரிட வேண்டும். நெல் பயிரிட வேண்டும் என்றாலும், அதிலும் ஐ. ஆர். 8 தான் பயிரிட வேண்டும் என்றால், அந்த ஐ. ஆர். 8தான் பயிரிடப்பட வேண்டும். இம்மாதிரியாக விவசாயிகளை வற்புறுத்தக் கூடாது. இப்படி வற்புறுத்தும் நிலைமை அந்தச் சங்கத்தில் இருந்தால், அந்தச் சங்கம் உருப் படுமா என்று எண்ணிப் பார்க்க வேண்டும். ஆகையால் தான் இதைப் பற்றிப் பேசுகிறேன். அமைச்சர் அவர்கள் இதைத் தெளிவுபடுத்தும் வகையில் பதில் அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

DEPUTY CHAIRMAN : I want to know the opinion of the House. We have got two Bills and we can dispose of them in the next few minutes.

THIRU K. RAJARAM : Sir, I have no objection. காலம் தாழ்த்த வேண்டும் என்ற எண்ணம் எனக்கில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தவறாக நினைத்துவிட்டார்கள். இதை எதற்காகச் சொல்லுகிறேன் என்றால், இப்படிப்பட்ட சங்கடங்கள் இருந்தால், அந்தச் சங்கங்கள் சரியாக நடக்காது. உறுப்பினர்கள் சங்கத்தில் சேருவதற்கே தயங்குவார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களின் நோக்கத்தைப் பொறுத்த வரையில், அது ஒரு நல்ல நோக்கம் என்று நான் ஒப்புக்கொள்ளுகிறேன். ''அம்பிஷஸ்'' என்ற வார்த்தை உபயோகிக்கப்பட்டிருக்கிறது இங்கே. யாரும் அப்படிச் சாதாரணமாக உபயோகிப்பதில்லை. அந்த அளவுக்கு அமைச்சர் அவர்களுக்கு ஆவல் அதிகமாக

2nd December 1970] [திரு. கே. ராஜாராம்]

இருக்கிறது. இந்தத் திட்டத்தை நாடு முழுவதும் கொண்டுவர வேண்டும் என்ற ஆசை அவருக்கு அளவுக்கு மீறி இருக்கிறது. எனவே தான் சொல்லுகிறேன், அவருடைய ஆவலுக்குத் தகுந்த மாதிரி ஷரத்துக்களை வைத்துக்கொள்ள வேண்டும். விவசாயிகளைக் கொஞ்சம் தாராளமாக விடவேண்டும். அவர்களைக் கட்டுப்படுத்தக் கூடாது. இன்ன பயிர்தான் வைக்க வேண்டும் என்று வற்புறுத்தக் கூடாது. இதை யோசித்துச் செய்ய வேண்டும் என்று சர்க்காருக்கு எச்சரிக்கை செய்து என் உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

*மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : மாண்புமிகு துணைத்தலைவர் அவர்களே, இந்த மசோதா தேவையா என்று இங்கே பேசிய திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் கேட்டார்கள். இந்த மசோதா எவ்வளவு அவசியமாகத் தேவைப்படுகிறது என்பதை முதலில் அவருக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். 1/4 ஏக்கர், 1/2 ஏக்கர் 10 சென்ட், 5 சென்ட், 1 ஏக்கர் என்று நிலம் உள்ளவர்களுக்கு எல்லாம் இதுவரை நீண்ட காலக் கடன் ஏதும் இந்த வங்கிகள் மூலமாகக் கொடுக்கப்படவில்லை. 30 ஆண்டுகளாகக் கொடுக்க முடியவில்லை. இப்போதுகூட அப்படிக் கொடுப்பதற்கு வசதி இருக்கிறது என்றால், இந்த மசோதா தேவையில்லை. ஆனல் இப்போதுள்ள சட்டப்படி கொடுக்க முடியாது. 1/2 ஏக்கர் நிலம் உள்ளவர்களுக்கு இதுவரை நீங்கள் கடன் கொடுத்திருக்கிறீர்களா ? சொல்லுங்கள். எந்த நில வள வங்கியிலாவது 1/2 ஏக்கர் நிலம் உள்ள சின்னஞ்சிறு விவசாயிக்கு ஒரு பம்பு செட்டு வாங்கவாவது கடன் கொடுத்தது உண்டா ?

திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு : கொடுங்கள் என்று அமைச்சர் அவர்கள் ரிஜிஸ்டிராரை கலந்து கொண்டு ஒரு விதி வகுக்க வேண்டியது தானே ? அதைச் செய்யுங்களேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : அது முடியவில்லை. கடந்த 30 ஆண்டுகளாகக் கொடுக்க முடியவில்லை என்று சொன்ன உடனேயே கொஞ்சம் ஆத்திரம் வருகிறது. குறிப்பிட்ட எந்த ஒருவர் மீதும் நான் இதற்குப் பழி போட விரும்பவில்லை. குற்றம் சாட்ட விரும்ப வில்லை. சட்டம் அப்படி இருந்தது. ஒரு தனிப்பட்ட, ஒரு ஏக்கர் நிலம் உள்ள, விவசாயிக்கு 10,000 ரூபாய் கடன் கொடுங்கள் என்று கேட்டால், யார் கொடுப்பார்கள் ? இங்கே 173 வங்கிகள் இருக்கின் றன. 106 வங்கிகளைக் கணக்கெடுத்துப் பார்த்ததில், 1/2 ஏக்கர், ஒரு ஏக்கர் உள்ள விவசாயி யாருக்கும் இந்த வங்கிகளால் யாதொரு பயனும் ஏற்படவில்லை. 50 கோடி ரூபாய் சின்னஞ்சிறு விவசாயி களுக்கு எந்த வகையிலும் பயன்படவில்லை என்று தெரிந்துதான் இதைக் கொண்டுவருகிறோம். மிகுந்த அனுபவம் உள்ள இந்திரா காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த திரு. கனகசபை அவர்களே எழுதி யிருக்கிறார்கள். சிறு விவசாயிகள் இதனல் பயனடைய முடியவில்லை என்று. அதைக் கூட்டுறவுத் துறையில் உள்ளவர்கள் ஏற்றுக்கொள்ளத் தான் வேண்டும். இதற்குக் காரணம், தகுந்த சட்டமில்லை. எனவே இதற்கு உள் நோக்கம் ஏதுமில்லை. நீங்கள் உங்கள் ஸ்ரீவில்லிப்புத் தூரில் அவ்வாறு சிறு விவசாயிகள் யாருக்காவது கொடுத்திருந்தால்,

சொல்லுங்கள். இல்லை. எந்த ஊரிலும் இல்லை. எந்த நில வள வங்கியிலும் கிடையாது. ஏனென்றால் 1/2 ஏக்கர் நிலம் உள்ளவர்களுக்கு எப்படிக் கடன் கொடுப்பார்கள்? எனவேதான் அவர்களைப் பார்த்து, ''நீங்கள் எல்லாம் ஒன்றுகச் சேருங்கள்'' என்று இந்த மசோதாவைக் கொண்டு வருகிறோம். இதற்குக் கூடவா எதிர்ப்பு. சின்னஞ்சிறு விவசாயிகளுக்கு நல்ல ஏற்பாட்டைச் செய்திருக்கிறீர்கள் என்று ஒரு வார்த்தை சொல்லக் கூடாதா? பாராட்ட இடமிருக்கும் போது கூடவா, ஒரு வார்த்தை பாராட்டிச் சொல்லக் கூடாது என்று தான் கேட்கிறேன். ஸ்ரீவில்லிப்புதூரில் இதுவரை 1/2 ஏக்கர் நிலம் உள்ளவர்களுக்கு நிதி உதவி கொடுக்கப்பட்டிருக்கிறதா? 3 முறை கேட்கிறேன். இல்லை என்பதுதானே பதில். 30 வருடமாகக் கொடுக்கப்படவில்லை என்பதுதானே உண்மை.

திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு: இப்போது இந்தச் சட்டத்தின் மூலம் 1/2 ஏக்கர் நிலம் உள்ளவர்களுக்குக் கொடுக்கப் போகிறீர்களா என்று தான் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: இனிமேல் எப்படி அனுமதிக்கப் போகிறோம் என்றால், 1/2 ஏக்கர், 1 ஏக்கர், 2 ஏக்கர் என்று இப்படி உள்ள சின்னஞ்சிறு விவசாயிகள் எல்லோரும் சேர்ந்து ஒரு கூட்டுறவு அமைப்பை ஏற்படுத்திக்கொண்டு, அவர்கள் ஒரு குழாய்க் கிணறு தோண்டி அதிலிருந்து வரும் தண்ணீரைப் பாய்ச்சி அதற்கான செலவை நிலத்திற்குத் தகுந்தவாறு பங்கிட்டுக்கொள்ள வேண்டும். அகரத்தில் ஒரு குழாய்க் கிணறு வெட்டியிருக்கிறார்கள். ஒரு மணி நேரத்தில் அதில் 25,000 கேலன் தண்ணீர் வருகிறது. 40 ஏக்கரில் உள்ள விவசாயிகள் பங்கிட்டுக் கொள்கிறார்கள். அவர்களுக்கு எல்லாம் தண்ணீர் பாய்கிறது. இதற்கு முன்னால் இது முடியவில்லை. அதைத் தான் இப்போது கொண்டுவந்திருக்கிறோம். ஒரு ஏக்கர் வைத்திருப்பவர்களுக்கு 10,000 ரூபாய்க்கு பம்ப் செட் கொடுங்கள் என்று யார் சொல்வார்கள்? ஆகையினாலே கூட்டுறவாகப் போட்டிருக்கிறோம். இதற்கு முன்னாலே கூட்டுறவிலே இதுமாதிரிப் போடுவதற்கு விதி இல்லாமல் இருந்தது.

திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு: இப்பொழுது இருக்கிற சட்டம் தடை செய்கிறது. அதனாலே கொடுக்கவில்லை.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: இப்பொழுது இருக்கிற சட்டப்படி முடியாது என்பதற்காகத்தான் இந்தச் சட்டம் தேவைப்படுகிறது. வேறு காரணத்தை வீணாகக் கற்பித்துக் கொண்டிருக்க வேண்டாம். 30 வருஷமாகப் பார்த்தாகிவிட்டது. இவர்களுக்கு வேறு வழியில்லை. வேறு வழியிருந்தால் சொல்லுங்கள். பஞ்சாப் மாநிலத்தில் 4 ஏக்கர், 5 ஏக்கர், 5 1/2 ஏக்கர் நிலம் வைத்திருப்பவர்களிடமிருந்து கட்டாயமாக நிலத்தை எடுத்துக்கொள்ளலாம் என்று சட்டம் கொண்டு வந்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட சட்டத்தை நிறைவேற்றினால் 5 சென்ட், 10 சென்ட் நிலம் வைத்திருப்பவர் பெரிய நிலக் காரருக்குக் கொடுப்பாரா? கொடுத்தால் எவ்வளவு

பேருக்கு வேதனை. ஆகவே அரை ஏக்கர்காரருக்கு, ''உன் நிலத்தை நீ வைத்துக்கொள், ஆனால் கூட்டுறவிலே சேர்ந்தால், பணம் தருகிறோம்,'' என்று வைத்திருக்கிறோம். இதை மற்ற மாநிலங்களிலே பாராட்டுகிறார்கள். எதிர்க்கட்சியிலேயிருந்து பாராட்டுகிறோம் என்று சொல்லாவிட்டாலும், குறை சொல்லாமல் இருப்பதற்காகச் சொல்கிறேன்.

DEPUTY CHAIRMAN : The question is—

"That the Tamil Nadu Co-operative Societies (Second Amendment) Bill, 1970, (L.A. Bill No. 38 of 1970) as passed by the Assembly, be taken into consideration."

The motion was put and carried and the Bill was taken up for consideration.

Clauses 2 to 5 were put and carried.

Clause 1, the Long Title and the Enacting Formula were put and carried.

THE HON. THIRU SI. PA. ADITANAR : Sir, I move— 7-10 p.m.

"That the Tamil Nadu Co-operative Societies (Second Amendment) Bill, 1970, (L.A. Bill No. 38 of 1970), as passed by the Assembly, be passed."

DEPUTY CHAIRMAN : Motion moved—

"That the Tamil Nadu Co-operative Societies (Second Amendment) Bill, 1970, (L.A. Bill No. 38 of 1970), as passed by the Assembly, be passed."

*திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு : துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் அரை ஏக்கரா, ஒரு ஏக்கரா இருக்கிறவர்களுக்காக அனுதாபப்படுவதைப் பார்த்து நான் வரவேற்கிறேன். நாங்கள் என்ன நினைக்கிறோம் என்றால், இந்தக் கிணறுகளை அரசாங்கத்திலேயே சிறிய விவசாயிகள் எங்கெங்கே அரை ஏக்கரா ஒரு ஏக்கரா வைத்துக் கொண்டிருக்கிறார்களோ அந்த இடத்திலேயே கிணற்றை வெட்டி, பம்ப் செட் அமைத்து, அவர்களுக்குத் தண்ணீரை இவர்களே கொடுத்து அந்தக் கிணற்றைப் பராமரிக்கக்கூடிய செலவு, தண்ணீரை விடக்கூடிய செலவு, மின்சாரத்துக்கு ஏற்படக்கூடிய செலவு ஆகியவற்றை ஏக்கரா வாரியாக வசூலித்துக் கொள்ளும்படியான முயற்சியை செய்தால் அது பயன்படும். உருப்படாத முயற்சி இது என்று கருதுகின்றேன்.

2nd December 1970]

திரு. கே. எஸ். மணி : இப்பொழுது கவர்ன்மெண்ட் டைரக்டாகப் போட்ட ''காமன் வெல்'' உருப்படவில்லை.

திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு : காமன் வெல்லே உருப்படவில்லையென்றால், இது உருப்படுமா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : ஆகையினாலே, அவர்களே கிணற்றை வெட்டி, பம்ப் செட் அமைத்து, தண்ணீரைக் கொடுத்து அதைப் பராமரிப்பதற்கு ஏற்படும் செலவுகளை அந்த விஸ்தீரணத்துக்குத் தகுந்தபடி வசூலித்துச் செய்யலாம் என்பதுதான் எங்கள் கருத்தே தவிர, அவர்களுக்குத் தண்ணீர் கொடுப்பதற்கான வசதிகளைச் செய்துகொடுப்பதிலே கருத்து வேற்றுமை இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*திரு. கே. ராஜாராம் : நான் முதலிலேயே சொன்னேன், இது மாதிரி இன்கம்டாக்ஸ் செலுத்துபவர்கள் இதில் புகுந்துவிடாமல் ஏதாவது வழி செய்ய அரசாங்கம் ஏற்பாடு பண்ணுமா என்று. அவர் அவர்கள் இஷ்டப்படி கிராப்பைப் போட்டுக் கொள்வதற்கு வசதி செய்து கொடுக்க வேண்டும், இப்பொழுது தடையாக இருக்கிறது என்றேன். அமைச்சர் அவர்கள் கவனம் வேறு பக்கம் திரும்பிவிட்டதனால் இந்த இரண்டின்பேரிலும் அபிப்பிராயத்தைச் சொல்ல விட்டு
7-10 p.m. விட்டார்கள். ஆகவே அந்த இரண்டை மட்டுமேனும் அமைச்சர் அவர்களின் கவனத்துக்குக் கொண்டுவந்து முடித்துக்கொள்கிறேன்.

DEPUTY CHAIRMAN : The question is—

"That the Tamil Nadu Co-operative Societies (Second Amendment) Bill, 1970, (L.A. Bill No. 38 of 1970), as passed by the Assembly, be passed."

The motion was put and carried and the Bill was passed.

(5) *The Tamil Nadu Co-operative Societies (Third Amendment) Bill*, 1970 (*L.A. Bill No.* 41 *of* 1970)

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : உதவித் தலைவர் அவர்களே தமிழ்நாடு 1970'ஆம் ஆண்டு கூட்டுறவு சங்கங்களின் 3-வது திருத்த மசோதாவை (தமிழ் நாடு மசோதா எண். 41/1970) தமிழகச் சட்டமன்றத்தில் நிறைவேறியவாறு இவ்வவை ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ள வேண்டும் என்று நான் முன் மொழிகிறேன். இது அப்பக்ஸ் சொசைடிஸ், உச்ச நிலையிலே இருக்கப்படுகிற ஒரு சில சங்கங்களைப் பொருத்தது. அதற்கு ஏன் இந்த மசோதா தேவைப்படுகிறது என்ற காரணங்கள் ஏற்கெனவே அச்சிடப்பட்டு உறுப்பினர்களுக்கெல்லாம் வழங்கப்பட்டிருக்கின்றன. அதற்கு மேற்கொண்டு சொல்லத் தேவையில்லை என்று கருதுகிறேன். ஆகவே இதை ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

---

* Printed as Appendix VI